දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )NA/07/05/2015
எனது இல )
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )
Date ) 2017.06 05

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

பொது சுற்றறிக்கை இலக்கம்:- 01 - 30 / 2017

பிரதிப் பணிப்பாளர் நாயகம் (இலங்கை தேசிய வைத்தியசாலை),
போதனா வைத்தியசாலைகள் மற்றும் பொது வைத்தியசாலை பணிப்பாளர்கள்,
வைத்திய அத்தியட்சகர்கள்,
உரிய நிறுவனத்தலைவர்கள் அனைவருக்கும்,

## தாதியர் சேவையில் உத்தியோகத்தர்களை 12 வருடங்களில் முதலாம் தரத்திற்குப் பதவியுயர்த்தல்

அமைச்சரவை செயலாளரின் அமப/16/1188/718/052 எனும் இலக்கம் கொண்ட 2017.05.10ஆம் திகதி கடிதத்தினூடு அறிவிக்கப்பட்ட 2017.05.02ஆம் திகதிய அமைச்சரவைக்கூட்டத்தின் கொள்கை ரீதியான விடயம் கருத்திற்கொண்டு, கீழுள்ளவாறு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

I. 2001.10.11ஆம் திகதிக்கு தொடர்ச்சியாக சேவையில் உள்ள தாதி உத்தியோகத்தர் ஒருவர் II "அ" பிரிவிற்கு பதவியுயர்வு பெற்று 07 வருட சேவைக்காலத்தை அதாவது, முதல் நியமனத் தினத்தில் இருந்து 12 வருட தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தை 2001.10.11 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பின் அவர்கள் சம்பள நிலுவைகள், பிற கொடுப்பனவுகள் இன்றி 2001.10.11 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் தாதியர் சேவையில் முதலாம் தரத்திற்கு பதவியுயர்த்தல்.

II. 02-173/2014 எனும் இலக்கம் கொண்ட 2014.12.12ஆம் திகதிய பொது சுற்றறிக்கையினூடாக பதவியுயர்வுகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 2014.09.04 ஆம் திகதியில் இருந்து சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதால், இலக்கம் I இன் தீர்மானத்திற்கு அமைய பதவியுயர்வு பெறுகின்ற உத்தியோகத்தர்களுக்கும் 2014.09.04ஆம் திகதியிலிருந்து சம்பளம் தயாரித்தல்.

III. 2010.11.01 திகதிக்கு பின்னர் 1837/08 எனும் இலக்கம் கொண்ட 2013.11.19 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட புதிய தாதியர் சேவை பிரமாணக்குறிப்பின் நியதிகளுக்கு அமைய முதலாம் தரத்திற்கு பதவியுயர்த்தல்.

02. அதற்கமைய மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்த, தாதியர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் Iம் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

03. விண்ணப்பிக்கும் போது தற்போது சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்கள் இணைப்பு 01 இற்கு அமையவும், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் இணைப்பு 02 இற்கு அமையவும் விண்ணப்பித்தல் வேண்டும். ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் இறுதியாக சேவையாற்றிய நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

04. மேற்படி அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு புறம்பாக பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக தாபனத்தலைவர்கள் பொறுப்பேற்றல் வேண்டும்.

05. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மத்திய அரசினால் நிர்வகிக்கப்படும் தாதி உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் உங்களது பரிந்துரையுடன் பணிப்பாளர் (தாதி நிர்வாகம்) 02 சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, சுவசிறிபாய, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு முறையாக அனுப்ப நடவடிக்கை எடுக்கவும்.

06. மேற்குறித்த பிரகாரம் வழங்கப்படுகின்ற பதவியுயர்வுகளுக்கான உரிய சம்பளம் தயாரித்தல் 2014.09.04 ஆம் திகதியிலிருந்து செய்தல் வேண்டும் என்பதை அறியத்தருகின்றேன்.

07. இச் சுற்றிக்கையின் விதிமுறைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் அறிவிக்குமாறும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

Actg. Secretary
Ministry of Health & Indigenous Medicine
"Suwasiripaya",
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10, Sri Lanka.

பி.ஜீ.எஸ் குணதிலக்க
செயலாளர் (ப.க)
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

பிரதிகள் :
1. கணக்காய்வாளர்
2. பிரதான செயலாளர்கள் - மாகாண அரச சேவை
3. மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு செயலாளர்கள்
4. சுகாதார செயலாளர்கள் - மாகாண சுகாதார அமைச்சின்
5. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்